**TAMIL NADU POLICE**
INTEGRATED INVESTIGATION FORM-I

# FIRST INFORMATION REPORT
## முதல் தகவல் அறிக்கை

(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

C 8102106

1. District மாவட்டம் : Sivagangai PS: காவல்நிலையம் V&AC Year: ஆண்டு 2022 FIR No.: மு.த.அ. எண் 07 Date: நாள் 06.08.2022

2. (i) Act சட்டம்: P.C. Act Sections பிரிவுகள்: 7 of P.C. Act 1988 as
(ii) Act சட்டம்: Sections பிரிவுகள்: amended by the
(iii) Act சட்டம்: Sections பிரிவுகள்: Prevention of corruption
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் : (Amendment) Act 2018

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் Date from : நாள் முதல் Date to : நாள் வரை 29.07.2022 at 1200 hrs
Time Period : நேர அளவு Time from : நேரம் முதல் Time to : நேரம் வரை 06.08.2022 at 1130 hrs
(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் Time : நேரம் 06.08.2022 at 1230 hrs
(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் Time : நேரம் 06.08.2022 at 1300 hrs

4. Type of Information : Written/ Oral :
தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக
எழுத்து மூலம்

5. Place of Occurrence (a) Direction and Distance from PS:
குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும்
Beat Number : முறைக் காவல் எண் (b) Address : முகவரி மாவட்ட குற்றப்பிரிவு அலுவலகம், சிவகங்கை. சுமார் 4 கி.மீ தென்கிழக்கு
(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : District :
இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையிட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் I. ஹக்கீம் (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் இஸ்மாயில்
(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 45 வயது (d) Nationality : நாட்டினம் (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
Date of Issue : வழங்கப்பட்ட நாள் Place of Issue : வழங்கப்பட்ட இடம்
(f) Occupation : தொழில் (g) Address : முகவரி பழைய எண் W/3/49, புதிய எண் W3/189, கிழக்கு தெரு, திருவங்காவல் ரோடு, மேலூர் தாலுகா, மதுரை மாவட்டம்

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள்
(தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

திரு.ராமகிருஷ்ணன், காவல் ஆய்வாளர், மாவட்ட குற்றப் பிரிவு, சிவகங்கை, சிவகங்கை மாவட்டம்.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

**No Delay**

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு —

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் —

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் கருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

பணிந்து சமர்பிக்கிறேன்:- இன்று 06.08.2022 ஆம் தேதி மதியம் 12.30 மணிக்கு காவல் ஆய்வாளர் A.கண்ணன் ஆகிய நான் நிலைய பொறுப்பில் இருந்தபோது, ஹக்கீம், த/பெ இஸ்மாயில், பழைய எண்.W, 3/49, புதிய எண்.W,3/189, கிழக்கு தெரு, கருங்காலகுடி, மேலூர் தாலுகா, மதுரை மாவட்டம் என்பவர் கொடுத்த புகார் மனுவை பெற்று, இரகசிய விசாரணை செய்தும், புகார்தாரர் மற்றும் குற்றம் சுமத்தப்பட்ட சிவகங்கை, மாவட்ட குற்றப் பிரிவில் காவல் ஆய்வாளராக பணிபுரியும் திரு.ராமகிருஷ்ணன் என்பவர் பற்றி ரகசிய விசாரணை மேற்கொண்டு, அவரின் நடத்தைகளை அறிந்தும், புகார் மனுவில் ஊழல் தடுப்பு சட்டத்தின்படி நடவடிக்கை எடுக்க முகாந்திரம் இருந்த காரணத்தினால் அந்த தகவலை சென்னை, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை, தென்சரக காவல் கண்காணிப்பாளர் அவர்களுக்கு தொலைபேசி மூலம் தகவல் தெரிவித்து, பின் அன்னாரின் அனுமதி பெற்று 06.08.2022 ஆம் தேதி மதியம் 13.00 மணிக்கு,

(தனித்தாள் இணைக்கப்பட்டுள்ளது)

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ...................... Rank ...................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS................................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ............................ பதவி ...................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ............................................ காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

(signature) 6/8/22

A. Kannan
INSP/V&AC

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம் 6/8/2022

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

06.08.2022 at 1400 hrs

Name: பெயர் A. KANNAN
Rank: நிலை Inspector of Police, V&AC, Sivagangai. No. எண்

சிவகங்கை, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப் பிரிவு குற்ற எண்.07/2022, U/s 7 of Prevention of Corruption Act 1988 as amended by the PC (Amendment) Act 2018-ன்படி வழக்குப் பதிவு செய்தேன். புகார் மனுவின் விபரம் பின்வருமாறு:- அனுப்புனர் I. ஹக்கீம் வயது 45, த/பெ. இஸ்மாயில் பழைய எண் W/3/49 புதிய எண்-W3/189 கிழக்கு தெரு கருங்காலகுடி மேலூர் தாலுகா மதுரை மாவட்டம் பெறுநர் உயர்திரு காவல் ஆய்வாளர் அவர்கள் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு சிவகங்கை நான் மதுரை மாவட்டம் மேலூர் தாலுகா கருங்காலகுடி கிழக்கு தெருவில் குடும்பத்துடன் குடியிருந்து வருகின்றேன் நான் கடந்த 1999ம் ஆண்டு முதல் 2012ம் ஆண்டு வரை குவைத்து நாட்டில் வேலை பார்த்து வந்தேன். எனது அண்ணன் சர்க்கரை பீரும் குவைத் நாட்டில் கடந்த 1995ம் ஆண்டு முதல் இதுநாள் வரை வேலை பார்த்து வருகின்றார். நான் 2016ம் ஆண்டு முதல் சிங்கம்புணரியில் அதிசயம் ஷாப்பிங் சென்டர் என்ற கடையை நடத்திவந்தேன். கொரனா காலத்திற்கு பின்னர் கடந்த 2021ம் ஆண்டு அந்த கடையை நான் மூடிவிட்டு வேறு ஒருவருக்கு வாடகைக்கு விட்டுவிட்டேன். தற்சமயம் அதில் வரும் வருமானத்தில் குடும்பத்தை நடத்தி வருகின்றேன். நானும், எனது அண்ணன் சர்க்கரை பீரும் குவைத்தில் வேலை பார்த்த போது எனது அண்ணன் சர்க்கரை பீர் பெயரில் சிங்கம்புணரியில் 1 சொத்தும் கருங்காலகுடியில் 5 சொத்துகளும் மற்றும் எனது அண்ணன் சர்க்கரை பீர் மனைவி பெயரில் மதுரையில் 1 சொத்தும் வாங்கினோம். நான் எனது அண்ணனின் அறிவுரைப்படி மேற்படி சொத்துக்களை பராமரித்து வந்தேன். மேலும், மேற்படி சொத்துகளில் எனக்கு சமபாகம் உண்டு என, எனது அண்ணண் சர்க்கரை பீர் கடந்த 2008ம் ஆண்டு சாட்சிகள் முன்னிலையில் உறுதிமொழி பத்திரம் எழுதி கொடுத்துள்ளார். எனது தந்தை இறந்த பின்பு, 2016ம் வருடம் சிங்கம்புணரியில் உள்ள இடத்தில் நான் கட்டிடம் கட்டி அதி'சயம் ஷாப்பிங் சென்டர் கடையை நடத்தி வந்த நிலையில், அது சம்மந்தமாக எனக்கும் எனது அண்ணன் சர்க்கரை பீர் அவர்களுக்கும் பிரச்சனை ஏற்பட்டு, நான் மதுரை நான்காவது கூடுதல் மாவட்ட நீதிமன்றத்தில் OS No.128/2016-ன் பிரகாரம் தொடர்ந்த சிவில் வழக்கை கனம் நீதிபதி அவர்கள் தள்ளுபடி செய்து விட்டதால், நான் சென்னை உயர்நீதிமன்றம் மதுரை கிளையில் AS (MD) No.156/2021-ன் படி வழக்கு தொடர்ந்தேன். அது சமயம் எனது அண்ணனும், ஊர் பெரியவர்களும் நீதிமன்றத்திற்கு வெளியே பிரச்சனையை பேசி தீர்த்துகொள்வோம் என்றும், வழக்கை வாபஸ் வாங்க சொன்னதாலும், நானும் சென்னை உயர்நீதிமன்றம்

மதுரை கிளையில் தாக்கல் செய்த வழக்கை வாபஸ் வாங்கி விட்டேன் அதன்பின் எனது அண்ணன் மற்றும் அண்ணி பெயரில் உள்ள சொத்துக்களுக்கு K.P.சாந்தகுமார் என்பவரை பவர் ஏஜெண்ட் ஆக நியமதித்துள்ளார்கள். நான் போலியான உறுதிமொழி பத்திரம் தயார் செய்து, அதை உண்மை என காண்பித்து எனது அண்ணன் மற்றும் அண்ணி பெயரில் உள்ள சொத்துக்களை மோசடியாக அபகரிக்க வேண்டும் என்ற நோக்கத்தில் நம்பிக்கை மோசடி செய்ததாகவும், அந்த சொத்துக்கள் மூலமாக கிடைக்கும் வாடகை மற்றும் வருமானங்களை நானே அனுபவித்து கொண்டு மோசடி செய்து விட்டதாகவும், என் மீதும், என்னுடன் உறுதிமொழி பத்திரத்தில் சாச்சி கையெழுத்து போட்ட அப்துல் ரஹ்மான், தினேஷ்குமார் மற்றும் ஸ்டாம்ப் வெண்டர் தாசில் முஹைதீன் ஆகியோர் மீதும் மதுரை மாவட்ட குற்றப்பிரிவில் கடந்த **23.06.2022**ம் தேதி பவர் ஏஜெண்ட் KP.சாந்தகுமார் கொடுத்த புகாரின் பேரில் குற்ற எண் 20/2022ன் படி வழக்கு பதிவு செய்து, என்னை மட்டும் **23.06.2022**-ம் தேதி கைது செய்து, நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தி மதுரை மத்திய சிறையில் அடைத்து விட்டார்கள் அதன்பின் நான் அந்த வழக்கில் நீதிமன்ற பிணை பெற்று, **20.07.2022**-ம் தேதி முதல் மதுரை மாவட்ட குற்றப்பிரிவு அலுவலகத்தில் தினமும் காலை 10.30 மணிக்கும், மாலை 05.30 மணிக்கும் கையொப்பம் செய்து வரும் நிலையில், இதே இடப்பிரச்சனை குற்றச்சாட்டுக்காக எனது அண்ணன் சர்க்கரை பீர் குவைத்தில் இருந்தவாறு, சிவகங்கை மாவட்ட கண்காணிப்பாளர் அவர்களுக்கு அளித்த புகாரின் பேரில், சிவகங்கை மாவட்ட குற்றப்பிரிவில் கடந்த **26.07.2022**-ம் தேதி குற்ற எண் 24/2022ன் படி வழக்கு பதிவு செய்து **27.07.2022**ம் தேதி சிவகங்கை மாவட்ட குற்றப்பிரிவு காவல் ஆய்வளர் ராமகிருஷ்ணன் அவர்கள் என்னை கைது செய்து, கனம் குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.2, சிவகங்கை அவர்கள் முன்பு ஆஜர் செய்த போது, அந்த வழக்கு குறித்து எனது வழக்கறிஞர் தெரிவித்த விபரங்களின் பேரில், கனம் நீதிபதி அவர்கள் என்னை அந்த வழக்கில் இடைக்கால பிணையில் விடுவித்து, தினமும் காலையில் சிவகங்கை மாவட்ட குற்றப்பிரிவு காவல் நிலையத்தில் ஆஜராகி கையெழுத்திட உத்தரவு பிறப்பித்தார். அதன்பிரகாரம் நான் 29.07.2022-ம் தேதி முதல், மதுரை மாவட்ட குற்றப்பிரிவில் கையெழுத்து போட்டுவிட்டு, பின்னர் சிவகங்கை மாவட்ட குற்றப்பிரிவிலும் கையெழுத்து போட்டு வருகின்றேன். இந்நிலையில், கடந்த **29.07.2022**-ம் தேதி மதியம் சுமார் 12 மணியளவில் சிவகங்கை மாவட்ட குற்றப்பிரிவு அலுவலகத்தில் பிணை நோட்டில் கையெழுத்து போட்டுவிட்டு, அங்கு அலுவலில் இருந்த காவல் ஆய்வாளர் ராமகிருஷ்ணன் அவர்களை சந்தித்து, ஒரே சம்பவத்திற்கு

மதுரையிலும், சிவகங்கையிலும் கேஸ் போட்டுள்ளீர்கள். நான் தினமும் மதுரையில் இரண்டு தடவையும் இங்கு சிவகங்கையில் ஒரு தடவையும் கையெழுத்து போட்டு வருகின்றேன். எனக்கு மிகவும் மன உளைச்சலாக உள்ளது எனது குடும்பத்தினரும் மிகுந்த கவலையில் உள்ளனர் என சொன்னேன். அதற்கு காவல் ஆய்வாளர் ராமகிருஷ்ணன், ஒன்னும் பிரச்சனையில்லை. பணம் ரூ.20000/-த்தை மட்டும் என்னிடம் கொடு இது சம்மந்தமாக மதுரையில் ஏற்கனவே வழக்கு பதிவுசெய்யப்பட்டுள்ள விபரத்தை தெரிவித்து, சிவகங்கையில் போடப்பட்டுள்ள வழக்கை Action Drop செய்து கோர்ட்டுக்கு தகவல் கொடுத்துவிடுகிறேன் என சொன்னார். அப்போது, நான் அவரிடம் ஒரே சம்பவத்திற்கு இரண்டு FIR போடப்பட்டுள்ளது. அந்த உண்மை விபரத்தை சொல்லி இந்த வழக்கை முடித்து என்னை காப்பாற்றுங்கள் என கெஞ்சி கேட்டேன். அதற்கு அவர் பணம் ரூ.20000/-த்தை கொண்டு வந்து கொடு, இந்த கேஸை Action Drop செய்து கோர்ட்டுக்கு ரிப்போர்ட் கொடுத்துவிடுகிறேன் என சொன்னார். அப்போது, அவரிடம் நீங்கள் கேட்கும் தொகை அதிகமாக உள்ளதே என கேட்டேன். அதற்கு அவர் இது பெரிய வேலை இதுக்கு நான் கேட்கும் பணம் ரூ.20000/-ம் என்பது மிக குறைவு. பணம் ரூ.20000/-த்தை கொண்டு வந்து கொடுத்தால் Action Drop செய்து விடுகிறேன் என கூறினார். நானும் வேறு வழியில்லாமல் சரி என்று சொல்லிவிட்டு வந்துவிட்டேன். அதன் பின்னர் நான் தினமும் காலையில் சிவகங்கை மாவட்ட குற்ற பிரிவு அலுவலகத்தில் கையொப்பமிட்டு வந்தேன் இந்நிலையில் இன்று 06.08.2022ம் தேதி காலை மதுரை மாவட்ட குற்றப்பிரிவில் கையொப்பம் செய்துவிட்டு, பின்னர் காலை 11.30 மணியளவில், சிவகங்கை மாவட்ட குற்றப்பிரிவில் கையொப்பம் செய்ய சென்ற போது, என்னை பார்த்த காவல் ஆய்வாளர் ராமகிருஷ்ணன் "என்னய்யா daily கையொப்பம் ஒழுங்கா போடுறையா" என்று கேட்டார். அதற்கு நான் "Daily கையொப்பம் போட்டுக்கிட்டிருக்கேன் ஆனால் உங்களைத்தான் பார்க்க முடியலவில்லை" என்று சொன்னேன். அதற்கு காவல் ஆய்வாளர் ராமகிருஷ்ணன் அவர்கள் என்னிடம் வேலை விசயமா சென்னை போயிருந்தேன், இன்றுதான் Office-க்கு வந்தேன் என்று சொல்லிவிட்டு, பணம் கொண்டு வந்து தரேனு சொன்னியே, கேட்ட பணம் என்னாச்சு" என்று கேட்டார். நான் அவரிடம் தற்போது என்னிடம் பணம் இல்லை. இன்று சாயங்காலம் வந்து தங்களை நேரில் சந்திக்கிறேன் என சொன்னேன். அப்போது, அவர் பணம் ரூ.20000/- கொடுத்தால்தான், உன் மேல உள்ள கேஸை Action Drop செய்து கோர்ட்டுக்கு

ரிப்போர்ட் அனுப்புவேன் என சொன்னார் நானும் சரியென்று சொல்லிவிட்டு அங்கிருந்து வந்துவிட்டேன். காவல் ஆய்வாளர் ராமகிருஷ்ணன் அவர்களுக்கு ரூபாய், 20000/- லஞ்சம் கொடுக்க எனக்கு விருப்பம் இல்லை எனவே, அவர் லஞ்சமாக கேட்ட பணம் ரூ.20000/-த்தை கொண்டு வந்துள்ளேன். என்னிடம் லஞ்சப்பணம் கேட்ட சிவகங்கை மாவட்ட குற்றப்பிரிவு காவல் ஆய்வாளர் ராமகிருஷ்ணன் அவர்கள் மீது சட்டப்பூர்வமான நடவடிக்கை எடுக்குமாறு தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறேன். மேலும், மதுரை மாவட்ட குற்றப்பிரிவு குற்ற எண்.20/2022-ன் முதல் தகவல் அறிக்கை நகல், அந்த வழக்கில் மதுரை மாவட்ட குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.1 அவர்கள் வழங்கிய நீதிமன்ற பிணை ஆணையின் நகல், சிவகங்கை மாவட்ட குற்றப்பிரிவு குற்ற எண்.24/2022-ன் முதல் தகவல் அறிக்கை நகல், சிவகங்கை மாவட்ட குற்றப்பிரிவு அலுவலகத்தில் கையொப்பம் செய்ய சிவகங்கை குற்றவியல் நீதித்துறை நடுவர் எண். 2 அவர்கள் வழங்கிய இடைக்கால பிணை உத்தரவு நகல் ஆகியவற்றை இணைத்துள்ளேன். இப்படிக்கு (ஒப்பம்) I. ஹக்கீம் 6.8.2022.

Sir, Received the complaint on 06.08.2022 at 12.30 hrs, the genuinness of the complainant was verified through sources and found to be genuine. The integrity and antecedents of the accused was also verified through sources and found to be bad. Found Prima-facie for the allegation of the complainant. Since, the registration of regular case is warranted, the matter is intimated to the SP/SR, V&AC, Chennai and registered a case in Sivagangai, Vigilance and Anti-Corruption Unit Crime No.07/2022, U/s 7 of Prevention of Corruption Act 1988 as amended by the PC (Amendment) Act 2018 on 06.08.2022 at 13.00 hrs and took up for Investigation. (Sd) A.Kannan 06.08.2022 Inspector of Police, Vigilance and Anti-Corruption, Sivagangai Detachment.

The Original FIR along with original complaint is submitted to the Hon'ble Special Judge for PC Act cases, Sivagangai and the copies submitted to the concerned officers.

A.Kannan
INSP/V&AC
6/8/2022